எத்தனை தடைகள் வந்தாலும் அவைகளைத் தகர்த்தெறிந்து, முதல்வரின் உறுதியான நடவடிக்கையால்

‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்’ என்ற சட்டத்தை நிறைவேற்றிக் காட்டி வருகிறோம்!

‘கலைஞர் தொலைக்காட்சி’க்கு அளித்த பேட்டியில் – இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!

சென்னை, செப். 28 -

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், முதல்வர் அவர்களின் உறுதியான நடவடிக்கையினால் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் சட்டத்தை எத்தனை தடைகள் வந்தாலும் அவைகளைத் தகர்த்தெறிந்து நிறைவேற்றி வருகிறோம் என பெருமையுடன் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் (25.09.2023) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலைஞர் செய்திகள் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின் விவரம் வருமாறு :-

கேள்வி: இன்றைக்கு (25.09.2023) காலையில் ஓதுவார் நியமனம் எல்லாம் இருந்தது. கிட்டத்தட்ட 15 பேரில் 5 பேர் பெண்கள் என்பது தான். ஏற்கனவே பெண்கள் ‘திராவிட மாடல்‘ அரசு வந்ததற்கு பிறகு நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். எவ்வாறு சாத்தியமாகியது?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: எல்லோருக்கும் எல்லாம் என்பது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தளபதி அவர்களுடைய கொள்கை. அந்த வகையில் ஆணுக்கு பெண் சரிநகர் சமம் என்ற வார்த்தை இந்த ஆட்சியில்தான் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. ஒரு நாடு உயர்ந்த நிலையை உச்சநிலையை அடைய வேண்டும் என்றால், பெண்களுக்கு உண்டான அனைத்து பிரதிநிதித்துவமும் கிடைத்தால்தான் அந்த நாடு சிறந்தோங்கும் என்ற வார்த்தைகளுக்கு ஏற்ப, பெண்ணினத்தின் பேரொளியாக இருக்கும் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இன்றைக்கு அர்ச்சகர்கள் தொடங்கி, பெண் ஓதுவார்கள் நியமனம் வரை ஒரு அமைதிப் புரட்சியை தமிழகத்தில் ஏற்படுத்தி இருக்கிறார்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், திருவேற்காடு தேவி கருமாரியம்மன், மாடம்பாக்கம் தேனுபுரீசுவரர், பண்ணாரி அம்மன் போன்ற 5 திருக்கோவில்களில் ஏற்கனவே பெண் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு பயிற்சி முடித்த 15 ஓதுவார்களுக்கு முறையாக அவர்களை விண்ணப்பித்து, அவர்களுக்கு முறையாக தேர்வுகள் நடத்தி, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் - தளபதி அவர்களுடைய நல்லாசியுடன் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. அதில் மகிழ்ச்சி என்னவென்றால், 5 பேர் பெண்கள்.

இதுவரையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 39 ஓதுவார்கள் புதிதாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டு அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் 11 பெண்கள் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பித்து அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து இருக்கிறார்கள். 33 சதவிகிதத்தையும் தாண்டி, இன்றைக்கு பெண்கள் நியமிக்கப்பட்டு இருப்பது, உண்மையிலேயே இந்த ஆட்சி பெண்களின் முன்னேற்றத்திற்காக ஆணுக்கு நிகர் பெண் சமம் என்ற நீதியை நிலைநாட்டுகின்ற ஒரு ஆட்சியாக, இன்றைக்கு பெண்கள் மகிழ்ச்சியோடு இதை வரவேற்கிறார்கள்.

ஓதுவார் பயிற்சி முடித்த பெண்களுக்கு பணி நியமனம்!

கேள்வி: நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்றுதான். இப்போது நீங்கள் சொன்னதுபோல, 33 சதவிகிதத்திற்கும் மேல் பெண்கள் இருக்கிறார்கள். ஆட்சி வருவதற்கு முன்பே அவர்கள் பயிற்சி பெற்றார்களா அல்லது ஆட்சி கொடுத்த நம்பிக்கையினால் அவர்கள் பயிற்சி நாம் பெறலாம், நமக்கான நியமனம் கிடைக்கும் என்று வருகிறார்களா?

அமைச்சர் பி.கே..சேகர்பாபு : இந்த பயிற்சியை பொறுத்த அளவில் 4 ஆண்டுகள். இதற்கு முன்புகூட இவ்வாறு பயிற்சி முடித்த பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை இவ்வாறு திருக்கோயில்களுக்கு பணி நியமனம் எந்த ஆட்சியும் செய்வதற்கு முன் வரவில்லை. இந்த ஆட்சிதான் ‘திராவிட மாடல்‘ ஆட்சி என்பதன் ஒரு சான்றாக, ஓதுவார் பயிற்சி முடித்த பெண்களுக்கு முக்கியத்துவம் தந்து அவர்களுக்கு முறையாக விண்ணப்பம் பெறப்பட்டு, தேர்வு நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சி பெற்றவர்களை இன்றைக்கு ஓதுவார்களாக நியமித்து இருக்கிறார்கள். இந்த ஆட்சியில்தான் இந்த பெண் ஓதுவார்களை இவ்வளவு பெரிய அளவு கணிசமான அளவு நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

கேள்வி: அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் நிறைவேற்றத்திற்குப் பிறகு, எவ்வளவு எதிர்ப்புகளை சந்திக்க வேண்டி இருந்தது. இப்போது பால் பேதம் இன்றி எல்லோருக்கும் எல்லாம் என்று பெண்களும் உள்ளே வருகிறார்கள். நிறைய சிக்கல்களை அரசு எதிர்கொள்ளவில்லையா?

அமைச்சர் பி.கே..சேகர்பாபு: தொடர் சிக்கல்களை சட்டப்பூர்வமாக சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். தந்தை பெரியார் அவர்களுடைய கனவுகள், கலைஞர் அவர்களுடைய எண்ணங்கள், அவர்கள் நினைத்ததெல்லாம் இன்றைக்கு நடைமுறைப் படுத்திக் கொண்டிருப்பவர் நம்முடைய தமிழ்நாடு முதல்வர் என்றால் அது மிகையாகாது.

அன்னைத் தமிழில் வழிபாடு ஆரம்பித்து, போற்றிப் புத்தகங்கள் வெளியிடுவதில் ஆரம்பித்து, 108 நூல்களை மறுசீரமைப்பு செய்து புதுப்பொலிவுடன் வெளியிட்டதில் ஆரம்பித்து, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று 29 அர்ச்சகர்களை நியமித்து, அவர்களை கருவறைக்குச் செல்ல வைத்த பெருமையும், அதேபோல் பெண்களும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்று இந்த ஆட்சியில் அதற்கு உண்டான உந்துகோல் தூண்டுகோல் இருந்ததால், இன்றைக்கு மூன்று பெண்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டு அவர்கள் திருவாய் மலர தெய்வத்திற்கு அர்ச்சனை செய்வது, பெண் குலத்திற்கே ஒரு பெரிய மகிழ்ச்சியை ஏற்பட்டு இருக்கிறது.

திருக்கோயில் பணிகளை சிறப்பாக நிறைவேற்றும் அரசு!

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், 20 பயிற்சிப் பள்ளிகள் முழுமையாக செயல்பாட்டிற்கு வந்திருக்கிறது. அதில் புதிதாக 2 பயிற்சிப் பள்ளிகளை ‘திராவிட மாடல்‘ ஆட்சி ஏற்பட்ட பிறகு துவக்கப்பட்டுள்ளது. 6 பயிற்சிப் பள்ளிகள் மூடியிருந்த நிலையில் மேம்படுத்தப்பட்டு அவையும் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. இந்த ஆண்டு 117 பேர் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிக்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள்.

எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்குவது, பெண் ஓதுவார்களை நியமிப்பது, ஓதுவார்கள் பற்றாக்குறை இல்லாமல் திருக்கோயில்களில் பணி நியமனம் செய்வது, பெண் அர்ச்சகர்களை உருவாக்குவது என்று ஒரு புறம் இந்த நடவடிக்கையை நாங்கள் தொடர்ந்து எடுத்து வந்தாலும், மறு புறம் இதை எப்படியாவது தடை செய்ய வேண்டும் என்று நீதிமன்றங்களுக்கு சென்று கொண்டிருக்கிற நிலையிலேயும், அதையும் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் இந்த ஆட்சி வழக்குகளை சந்தித்து, அதற்கு உண்டான சட்டத்தை நிலை நாட்டுகிற முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. எவ்வளவு தடை கற்கள் உண்டு என்றாலும், அவைகளை தகர்த்து எறிகின்ற திடம் தோள்கள் இந்த ஆட்சிக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் உண்டு. நிச்சயம் இந்த பணி தொடரும். இந்த பணியை தொடர்ந்து இந்து சமய அறநிலைத் துறை மேற்கொள்ளும், வெற்றி பெறும்.

கேள்வி: இப்போது இந்து சமய அறநிலையத் துறை சார்பாக நிறைய விஷயங்கள் செய்து வருகிறீர்கள். தி.மு.க. அரசாங்கம் ஆன்மிகத்திற்கு எதிர் என்று ஒரு கருத்து வைக்கப்படுவதாலேயே கங்கணம் கட்டிக் கொண்டு நிறைய விஷயங்கள் செய்கிறீர்களா? கோயில் நிலத்தை மீட்பது, 1,000 கோயில்களுக்கு குடமுழுக்கு என்பதெல்லாம்?

அமைச்சர் பி.கே..சேகர்பாபு : நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டை பொறுத்த அளவில் இந்தியாவில் முதன்மை மாநிலம் ஆக்க வேண்டும் என்று துடிப்போடு ஒரு நாளைக்கு 19 மணி நேரம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அனைத்து துறைகளும் தங்களை முன்னிறுத்திக் கொண்டு செயல்பட்டால்தான் முதலமைச்சர் அவர்களின் எண்ணம் இந்தியாவிலேயே நம்பர் 1 முதல்வர் இந்தியாவிலேயே தமிழ்நாடு நம்பர் 1 மாநிலம் என்ற பெருமையை எய்த வேண்டும் என்றால், அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து வளர்ச்சி கண்டால்தான் அந்த நிலை எட்டப்படும். அந்த வகையில் திருக்கோயிலை பொறுத்தவரையில் ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய திருப்பணிகள், குடமுழுக்குகளை நடத்துவதற்கு முன்னெடுத்து இருக்கிறோம். அதேபோல் நீண்ட நாட்களாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நன்னிராட்டு விழா நடைபெறாமல் திருக்கோயில்களின் திருப்பணிகளை விரைவுப்படுத்தி நன்னீராட்டு விழா நடத்துவது, திருக்கோயில்கள் திருக்குளங்களை சீரமைப்பது, திருக்கோயில்களில் திருத்தேர்களை சீரமைப்பது, திருக்கோயில்களின் நந்தவனங்களை சீரமைப்பது, திருக்கோவில்களின் மடப் பள்ளிகளை சீரமைப்பது, திருக்கோயில்களின் வரும் பக்தர்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, பொதுக் கழிப்பிடங்கள் போன்றவற்றை உருவாக்குவது, திருக்கோயில்களின் சார்பில் இருக்கும் திருமண மண்டபங்களை மேம்படுத்துவது, புதிதாக திருமண மண்டபங்களை கட்டுவது, பக்தர்கள் தங்கும் விடுதியை மேம்படுத்துவது, புதிதாக பக்தர்கள் தங்கும் விடுதியை கட்டுவது, முடி காணிக்கை மண்டபங்களை ஏற்படுத்துவது, விருந்து மண்டபங்களை ஏற்படுத்துவது, அர்ச்சகர்கள் நலன் - பணியாளர்கள் நலன் இவைகளில் அக்கறை கொள்வது போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்வதால் தான் இந்த ஆட்சி ஒரு ஆன்மிக ஆட்சியாக பக்தர்களாலும், மக்களாலும் வரவேற்கப்படுகிறது.

இந்த பணிகளை மேலும் மேலும் சிறப்போடும், விரைவோடும் செய்வதற்கு நாங்கள் கேட்கின்ற நிதியை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். இந்த 28 மாத கால ஆட்சியில் கிட்டத்தட்ட அரசு சார்பில் 600 கோடி ரூபாய் அளவிற்கு மானியமாக வழங்கி இருக்கிற, 1959ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலைத் துறையில் இதற்கு முந்தைய ஆட்சிகளில் வழங்கப்பட்ட நிதிகளை ஒப்பிட்டு பார்க்கும்போது அரசு மானியமாக வழங்கிய நிதி தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் இந்த ஆட்சி ஒரு ஆன்மிகத்தில் குறிப்பாக இறை நம்பிக்கை உள்ளவர்களுக்கு ஒரு வரப் பிரசாதமான ஆட்சி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி: முதலமைச்சர் அவர்கள் கூட அதை சொன்னார்கள், இறை நம்பிக்கையாளர்களும் போற்றுகிற ஆட்சியாக இருக்கிறது என்று. நீங்கள் நிறைய விஷயங்களை பட்டியல் போட்டீர்கள். ஆனால் ஒரு பக்கம் நீங்கள் பதவி விலக வேண்டும் என்று போராட்டம் செய்கிறார்களே?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : பதில்: பதவியை எங்களுக்கு அளிப்பதும், எங்களுக்கு பதவி வேண்டாம் என்று முடிவு செய்வதும் முதலமைச்சர் அவர்களின் முடிவு. இந்த ஆட்சி தளபதி அவர்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி. எனவே அவர்கள் எதிர்பார்த்தது ஆன்மிகத்தை கையிலே எடுத்து அரசியல் செய்யலாம் என்று நினைத்தார்கள். முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்த ஆட்சி ஆன்மிகத்திற்கும் ஆதரவளிக்கிற ஒரு ஆட்சி, ஆசிகர்கள் நாத்திகர்கள் இருவருக்கும் உண்டான ஆட்சி என்பதை முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் நிரூபித்துவிட்டபடியால், அவர்கள் எண்ணங்கள் நிறைவேறாத காரணத்தால் இவ்வாறு ஒரு பொய் பரப்புரையை இந்த ஆட்சியின் மீது பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

குறைந்த காலத்தில் 1,075 கோயில்களுக்கு குடமுழுக்கு விழா!

எங்களைப் பொறுத்த அளவில் முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுகின்ற திசை நோக்கி, எங்களுடைய ஆன்மிகப் பயணம் மேலும் விரிவடையும். ‘திராவிட மாடல்‘ ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், இதுவரையில் இல்லாத அளவிற்கு இந்த 28 மாத காலத்தில் 1,075 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற்று இருக்கிறது.

நில மீட்பை எடுத்துக் கொண்டால், ஆக்கிரமிப்பில் இருந்த நிலங்கள் சுமார் 5,375 கோடி ரூபாய் அளவிற்கு மீட்கப்பட்டு இருக்கிறது. அதேபோல் சிட்டா மாறுதல், பட்டா மாறுதல் என்று அரசை ஏமாற்றி வருவாய்த் துறையில் தவறாக மாறுதல் செய்யப்பட்ட அந்த நிலங்களை மீண்டும் திருக்கோயில் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்ட வகையில் 9000 ஏக்கர் நிலம் இதுவரையில் பட்டா மாறுதல் செய்யப்பட்டு இருக்கிறது.

அதேபோல் நவீன உக்தியோடு ரேவர் கருவி வாயிலாக இதுவரையில் 1 லட்சத்து 51 ஆயிரம் திருக்கோயில் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு, நில அளவையாளர்கள் வாயிலாக HR&CE என்று கல் பதிக்கப்பட்டு 1 லட்சத்து 51 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இந்த 28 மாதங்களில் அடையாளம் காணப்பட்டு திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்கள் என்ற பெயர் பலகை வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் இறை சொத்து இறைவனுக்கு என்ற வார்த்தையை, இந்த ஆட்சியின் மூல மந்திரமாக எடுத்துக் கொண்டு இறை சொத்துக்கள் காப்பாற்றுகிற பணி தொடரும். இந்த தொடர் நடவடிக்கையில் இறை அன்பர்களும், பொது மக்களும், பக்தர்களும் இந்த ஆட்சியை வெகுவாக பாராட்டி மகிழ்ச்சி அடைவது எங்களுக்கு மேலும் உத்வேகத்தை தருகிறது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களின் வரலாற்றில் முதல்முறையாக

93.30 சதவிகிதம் மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது!

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் தகவல்!

சென்னை,செப்.28- அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் வரலாற்றில் முதல் முறையாக 93.30% சதவீதம் அளவில் மாணவர் சேர்க்கை 40 நிலையங்களில் 100 சதவீதம் சேர்க்கை நடைபெற்றுள்ளது.

2023ம் ஆண்டில் 102 அரசு தொழிற்பயிற்சி நிலை யங்களில் மாணவர் சேர்க்கை 23.09.2023 அன்றைய நிலையில், 93.30% சதவீதத்தை எட்டியுள்ளது. 40 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 100 சதவீதம் மாணவர்கள் சேர்க்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 25.09.2023 முதல் பயிற்சி துவங்கப்பட்டுள்ளது. ஃபிட்டர், எலெக்ட்ரீசியன், மெஷினிஸ்ட், டர்னர், சர்வேயர், கம்மியர் மோட்டார் வண்டி, வயர்மேன், வெல்டர் போன்ற 57 பொறியியல் தொழிற்பிரிவுகளிலும் ஃபுட் ப்ரொடக்ஷன், ஆடை வடிவமைத்தல் தொழிற்நுட்பம், போன்ற 22 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் உலகத்தரத்திலான தொழில்நுட்ப பயிற்சியினை நமது மாணவர்கள் பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கில் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்க ளில் M/s. டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்து டன் இணைந்து ரூ.2877 கோடி செலவில் புதிய தொழில் நுட்பங்களு டன் கூடிய தொழில் 4.0 தொழில் நுட்ப மையங்கள் திறந்து வைக்கப்பட்டு இந்த ஆண்டு முதல் இண்டஸ்ட்ரியல் ரோபோட் டிக்ஸ் டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் டெக்னீஷியன், மேனுஃபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் ஆட்டோமேஷன், மெக்கானிக் மின்சார வாகனங்கள், அட்வான்ஸ்டு சி.என்.சி மெஷினிங், பேசிக் டிசைனர் விர்ச்சுவல் வெரிஃபையர் போன்ற நவீன தொழிற்பிரிவுகளில் மாணவர்களுக்கு பயிற்சி துவங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் கட்டணமில்லா பயிற்சியினை வழங்குவதுடன் அவர்களுக்கு சீருடைகள், காலணிகள், பாடப்புத்தகங்கள், வரைபட கருவிகள், சைக்கிள், மாதந்தோறும் ரூ.750/ உதவித்தொகை, விடுதி வசதி போன்றவையும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு தொழில் நிறுவனங்களுடன் இணைந்த மேலாண்மைக் குழுவின் ஒத்துழைப்புடன் பயிற்சியின் போதே முன்னணி தொழிற் நிறுவனங்களில் இன்டர்ன்ஷிப் பயிற்சி வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற மாணவர்கள் தொழிற்தேர்வில் 93.07% தேர்ச்சி பெற்றுள்ளனர் .

தொழிற் பயிற்சி நிலையங்களில் செய்முறை பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன் மாணவர்களை முன்னணி தொழில் நிறுவனங்களில் பணியமர்த்துவதற்காக அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பணியமர்வு பிரிவு உருவாக்கப்பட்டு இந்த ஆண்டு 80% மாணவர்கள் வளாக நேர்காணல்கள் மூலம் முன்னணி தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர்.

முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அந்நிறுவனங்களில் மாணவர்களுக்கு நேரடி செய்முறை பயிற்சி மற்றும் இன்டர்ன்ஷிப் பயிற்சி வழங்கப்படுவதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுவதால் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர மாணவர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது.

மேற்கண்ட தகவலை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், கொ.வீர ராகவ ராவ், வெளியிட்டார்.

அண்ணா நகரில் கழக அணிகளின் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, செப். 28 – கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அவர்களின் அறிவுறுத்தல்படி சென்னை மேற்கு மாவட்ட அணிகளின் அறிமுக ஆலோசனைக் கூட்டம் அண்ணாநகரில் அமைந்துள்ள அகர்வால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

உடன் சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், பகுதி செயலாளர்கள் ச.பரமசிவம், மா.பா.அன்பு துரை, வினோத் வேலாயுதம், ஐ.கென்னடி, மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர். என்.துரை, வி.எஸ். கலை, சங்கீதா, ஜெ. எஸ். அகஸ்டின் பாபு மற்றும் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு/பொதுக்குழு உறுப்பினர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட அணிகளின் மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மகளிர் உரிமைத் தொகை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து ஈரோடு வடக்கு மாவட்ட விவசாய அணி சார்பில் கோபியில் நடைபெற்ற இருசக்கர வாகன பேரணி மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் கழக விவசாயணி இணைச் செயலாளர் கள்ளிப்பட்டி மணி முன்னிலையில் கழக விவசாயணி செயலாளரும், தமிழக அரசின் டெல்லி பிரதிநிதியுமான எ.கே.எஸ்.விஜயன் தொடங்கி வைத்தார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், கழக விவசாய அணி இணை செயலாளர் குறிஞ்சி என்.சிவக்குமார், கழக நெசவாளரணிச் செயலாளர் சிந்து ரவிச்சந்திரன் , மாவட்ட விவசாயணி அமைப்பாளர் இ.ஆர். சம்பத், கோபி நகர கழகச் செயலாளர் என்.ஆர்.நாகராஜ், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவேங்கடம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், விவசாயணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டக் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் அகூர் த.முத்துச்செல்வம் – சசிகலா ஆகியோரது புதல்வி எம்.எஸ். செந்தாமரை – எம்.பி.பாலச்சந்திரன் ஆகியோரது திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் ஆலத்தூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, பெரம்பலூர் ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ராஜ்குமார், வேப்பூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் தி.மதியழகன், வேப்பூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் சி.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

அன்னவாசல் தெற்கு ஒன்றியம், அன்னவாசல் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், அன்னவாசல் தெற்கு ஒன்றியம், அன்னவாசல் பேரூர்க் கழகச் செயலாளர் எம்.எஸ். அக்பர் அலி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா**, (அன்னவாசல், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்.) அவர்கள், அன்னவாசல் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26.09.2023

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
கலைஞர் 100 1924 - 2023

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ. எண். 38/2023–24/ தவ.அ / நாள். 20.09.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023–24 –ன் கீழ் விழுப்புரம் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-068) ஒரு பணிக்கு இணையவழியில் இரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **17.10.2023, 15.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **29.09.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க&ப வட்டம், விழுப்புரம்.

செ.ம.தொ.இ./5229/ஒப்பந்தப்புள்ளி/2023

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை
கலைஞர் 100 1924 - 2023

இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1/577/2023

மின்னணு ஒப்பம்

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

கோப்பு எண்	பணியின் விவரம்	முன் வைப்பு தொகை
சி1/ 577 / 2023	பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 06 முதல் 10 வரையிலான லாரி நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிட கழிவு மற்றும் தேவையில்லாத பொருட்களை அகற்ற 08 எண்ணிக்கையிலான ஸ்கிட் ஸ்டீர் லோடர்களை 170 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவது.	ரூ.96,500/-

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 16.10.2023 மதியம் 3.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 17.10.2023 மதியம் 3.30 மணி
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 5309 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)